# அரக்கோணம் நகராட்சி

## அவசர நகர மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.38 நாள்: 17.09.2025.

பொருள் : நகர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்: 19.09.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவசர கூட்டம் நடைபெறுதல் – அறிவித்தல் – சம்மந்தமாக.

ooOoo

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் அவசர கூட்டம் 19.09.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூடத்தில், நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் அவசர கூட்டத்தில் நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**தங்கள் அன்பார்ந்த**

(ஒம்)/–திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

இடம் : அரக்கோணம் நகராட்சி
நாள் : 17.09.2025.

# அரக்கோணம் நகராட்சி
# அவசரக்கூட்டம்

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19.09.2025–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அரக்கோணம் நகராட்சியில் அலுவலக வளாகத்தில் உள்ள டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூட்டரங்கில் நகர மன்ற தலைவர் அவர்களால் நடத்தப்பட உள்ள சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

| | |
|---|---|
| **திருக்குறள்:** | **இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை<br>முறைகாக்கும் முட்டாச் செயின்.** |
| **விளக்கம்:** | **நீதி வழுவாமல் ஓர் அரசு நடைபெற்றால் அந்த அரசை அந்த நீதியே காப்பாற்றும்** |

**<u>பொருள் எண். 1</u>**

**<u>சாதாரண கூட்ட எண்.37 நாள் 18.06.2025 அன்று நடை பெற்ற கூட்ட பொருள் எண்.39ல் ஒத்திவைக்கப்பட்ட மன்றப்பொருள்</u>**

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023 அத்தியாயம் IX பத்தி II–ல் காணும் விதிகளின் விதிகளுக்கும் மேலும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023 அத்தியாயம்–6, சட்டப்பிரிவு 108 முதல் 117க்கும் கட்டுப்பட்டதாகும். மேலும் அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநிந) துறை, நாள்.19.09.2008, மற்றும் அரசாணை (2ப) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி4) நாள் 06.08.2024–ன்படி அரக்கோணம் நகராட்சியின் குத்தகை இனங்களுக்கான பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களை குத்தகை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு அனுபவித்துகொள்ள XX–XX–2025–ம் தேதி …………………கிழமை காலை 11.00 மணி முதல் 1.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும் அன்று பகல் 3.30 மணிக்கு பிறகு ஆணையர் அல்லது அவர் அதிகாரம் பெற்ற அலுவலரால் இந்நகராட்சி ஏல பொது கட்டுப்பாடுகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு குத்தகை இனங்களுக்கு பகிரங்க பொது ஏலம் விடப்படும் ஒப்பந்தபுள்ளி மற்றும் பொது ஏலத்தில் கலந்துக்கொள்ள விரும்புகிறவர்கள் ஏலத்திற்கு ஒரு நாட்களுக்கு முன்னதாக XX–XX–2025 தேதி ………………கிழமை அன்று மாலை 4.30 மணிக்குள் ஏல முன்பணம் மற்றும் காப்பு தொகைக்கான வங்கி வரைவோலையாகவோ/ ரொக்கமாகவோ கணினி மையத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதன் பிறகு செலுத்தப்படும் ஏல வைப்புத்தொகை மற்றும் காப்பு தொகையை கொண்டு ஏலம் கோரவோ ஒப்பந்தபுள்ளி கொடுக்கவோ அனுமதிக்கப்படமாட்டாது. வைப்புத் தொகை ஒப்பந்தபுள்ளிக்கு தனியாகவும் ஏலத்திற்கு தனியாகவும் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தபுள்ளி கொடுப்பவர்கள் முன்வைப்புத் தொகை செலுத்திய அசல் ரசீது இணைத்து கொடுக்கப்பட வேண்டும். பொது ஏலம் முடிந்தவுடன் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும் வைப்புத்தொகை செலுத்தாதவர்கள் எக்காரணம் கொண்டும் ஏலம் கோரவோ அல்லது ஒப்பந்தபுள்ளி கொடுக்கவோ அனுமதிக்க இயலாது, ஏலத்தையோ மற்றும் ஒப்பந்தபுள்ளியோ ரத்து செய்யவோ அல்லது தள்ளி வைக்கவோ ஆணையருக்கு முழு அதிகாரமுண்டு, மேலும் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிக்கான வைப்புத்தொகை நகரமன்ற ஒப்புதல் பெற்ற பின்னரே சம்மந்தப்பட்டவர்களுக்கு திருப்பி வழங்கப்படும். பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி இறுதி செய்வதில் நகரமன்றத்தின் முடிவே இறுதியானதாகும்.

| வ. எ ண் | கடை எண் | கடையின் பெயர் | வைப்பு தொகை செலுத்தப்பட வேண்டிய தொகை (கடை ஒன்றுக்கு.ரூ) | கூடுதல் ஏல வைப்பு தொகை (கடை ஒன்றுக்கு.ரூ) | குத்தகை காலம் (மூன்றாண்டுகள் ஒன்றுக்கு 15% உயர்வின் அடிப்படையில்) (பண்ணிரண்டு ஆண்டுகள் மட்டும் ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | 204 கடைகள் | தினசரி சந்தை கடைகள் – வரிசை எண்.01 முதல் 204 வரை | ரூ.2,00,000/– | ரூ.2,00.000/– | குத்தகை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் வரை |

மேலும் இதன் தொடர்பாக அனைத்து விபரங்களையும் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் சம்மந்தப்பட்ட பிரிவில் அனுகி நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**பொது நிபந்தனைகள்**

1, எல்லா குத்தகைகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் தற்பொழுது அமலில் இருக்கும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023 அத்தியாயம் IX பத்தி II ல் காணும் விதிகளின், விதிகளுக்கும் மேலும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் 2023 அத்தியாயம் 6, சட்டப்பிர்வு 108 முதல் 117க்குள் கட்டுப்பட்டதாகும் மேலும் தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி4) துறை, அரசாணை எண்,181 நாள்:– 19–09–2008 ன் படி அரக்கோணம் நகராட்சியின் குத்தகை இனங்களுக்கான பொது நிபந்தனைகள் மற்றும் ஒப்வொரு இனத்திற்கும் குறிப்பிட்ட சிறப்பு நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்,

2, அரசினால் அவ்வப்பொழுது பிறப்பிக்கப்படும். உத்தரவுகளுக்கும் திட்டங்களுக்கும் குத்தகைதாரர்கள் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்.

3, ஏலம் நடக்கும் காலத்திலும் அதன்பின் குத்தகைக்காலம் முடியும் வரையிலும் இந்த அறிக்கையில் கண்ட எந்த நிபந்தனைகளையும் மாற்றவோ எடுத்துவிடவோ அல்லது புதிதாக சேர்க்கவோ ஆணையர் மற்றும் நகர்மன்றத்திற்கு அதிகாரம் உண்டு

4, அட்டவணையில் கண்டுள்ள இனங்களுக்கு குறிப்பிட்ட வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை வங்கி வரைவோலையாக நகராட்சி அலுவலகத்தில் வழங்கி ஒப்பந்தப்புள்ளி கொடுக்கலாம். ஒவ்வொரு இனத்திற்கும் முதலில் ஏலம் நடத்தப்படும். ஏலம் முடிந்த பின் ஒப்பந்தப்புள்ளிகள் ஏலதாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். ஏலம் நடத்துவதற்கு முன்னால் ஒப்பந்தப்புள்ளிணை திறக்கப்படமாட்டாது.

5, ,உயர்ந்த கேள்விகளை ஒத்துக்கொள்ளவும் அல்லது எல்லா கேள்விகளையும் ரத்து செய்து மறு ஏலத்திற்கு விடுவதற்கும் ஆணையர் மற்றும் நகர்மன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அப்படிப்பட்ட முடிவுகள் எந்த ஏலதாரராகிலும் ஆட்சேபிக்கத் தக்கது அல்ல

.

**6,** முதல் ஏல கேள்விதாரரின் டெபாசிட் தொகை தவிர மற்ற ஏலதாரர்களின் டெபாசிட் தொகை, கூடுதல் டெபாசிட் தொகை மட்டுமே ஏலம்முடிந்த 30 தினங்களில் காசோலையாக திரும்ப வழங்கப்படும். மறு எலம் ஏற்பட்டால் முந்தைய ஏலதாரரின் உயர்ந்த பட்ச கேள்வியை அரசு மதிப்பாகவைத்து மறு ஏலம் ஆரம்பிக்கப்படும்

**7,** யாதொரு காரணமும் சொல்லாமல் ஒரு ஏலதாரருடைய கேள்வியை தள்ளிவிட எந்தவொரு குத்தகைதாரரையும் ஏலம் கேட்பதிலிருந்து ஆணையருக்கு அல்லது ஏலம் நடத்துபவருக்கு அதிகாரம் உண்டு விலக்கிவிட,

**8**, சாதாரணமாக ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் உயர்ந்த கேள்விதாரருக்கு ஏலம் முடிவு செய்யப்படும் உயர்ந்த கேள்வியோ மற்ற எந்த கேள்வியோ எவ்வித காரணமும் சொல்லாமல் தள்ளிவிட ஆணையாளர் நகரமன்றத்திற்கு அதிகாரம் உண்டு,

9, முடிவு செய்யப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்ட குத்தகைதாரர்கள் ஏலப்பதிவேட்டில் ஏனம் முடிவுடன் கையொப்பம் இடுவதுடன் தற்காலிக எழுதிக்கொடுக்கவேண்டும்,

**10,** ஒவ்வொரு இனத்திற்கும் நிர்ணயிக்கப்பட்ட டெபாசிட் மற்றும் கூடுதல் டெபாசிட் தொகையை வங்கி பணவரைவோலை மூலம் ஏலம் நடைபெறும் முதல் நாள் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு பெறப்படும் டெபாசிட் தொகை ஏலம் எடுக்கப்பட்டால் டெபாசிட் தொகை மட்டும் அந்த ஆண்டு வரவில் எடுத்துக்கொள்ளப்படும் கூடுதல் டெபாசிட் தொகை குத்தகை காலம் முடிந்த பின்பே வழங்கப்படும் இதற்கு வட்டி எதுவும் வழங்கப்படமாட்டாது,

**11,** ஏலம் கேட்பவர்கள் தாங்களே நேரில் வரவேண்டும். அல்லது சரியான எழுத்து மூலம் பதிவு செய்யப்பட்ட (Power of Attorney) அதிகாரம் பெற்றவர்களை அனுப்பவேண்டும். இவர்கள் தான் ஏலம் கேட்டும் இடத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள். மற்றவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேற்படி பதிவு செய்யப்பட்ட அதிகாரப் பத்திரம் எலம் நடத்துவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவோ அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

**12**, ஏலம் கேட்க விரும்புவர்கள் தாங்களாவது அல்லது அதிகாரம் பெற்ற தங்கள் முகவர் மூலமாவது ஒவ்வொரு இனத்திற்கும் தனித் தனியாக டெபாசிட் தொகை செலுத்தி அதன் அத்தாட்சி உடன் தனது முகவர் என்றால் முகவர் என்பதற்கு அத்தாட்சி பத்திரமும் ஒரு புகைப்பட நகலுடன் தாக்கல் செய்து ஏலம் கேட்க வேண்டும். ஒவ்வொரு குத்தகை இனத்திற்கும் டெபாசிட் தொகை மற்றும் கூடுதல் டெபாசிட் தொகை ஆகியன ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே செலுத்த வேண்டும். சொத்து மதிப்பு சால்வன்சி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**13**. ஒவ்வொரு குத்தகை இனத்திற்கும் தனித்தனியே ஏலக்கேள்வி வைப்புத் தொகை செலுத்தியவர்கள் மட்டும் ஏலம் நடக்கும் இடத்தில் அந்த இனத்திற்கான ஏலத்தில் மட்டும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

**14.** ஏலம் கேட்க விரும்புபவர்கள் எல்லா பொது நிபந்தனைகளையும், சிறப்பு நிபந்தனைகளையும் படித்து அறிந்து கொண்டு அவைகளுக்கு கட்டுப்பட்டு ஏலம் கேட்பதாக ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்னர் தான் அவர்கள் மட்டும் ஏலம் நடக்கும் இடத்திற்குள்ஏலம் கேட்க அனுமதிக்கப்படுவார்கள். அப்படி கையெழுத்திடாமல் ஏலத்தில்

கலந்து கொண்டாலும் பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டே ஏலம் கேட்பதாக கருதப்படும். உரிய டெபாசிட் தொகை செலுத்தாதவர்கள் ஏலம் நடக்கும் இடத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**15,** இதற்கு முன்பு அரக்கோணம் நகராட்சியில் ஏலம் கேட்பவர் பெயரிலோ, அல்லது அவர்களின் மனைவி பெயரிலோ, அவரது சகோதரர், சகோதரிகள் பெயரிலோ மற்றும் உறவினர்கள் பெயரிலோ ஏலம் எடுத்து நிறைவேற்ற தவறியவர்களும் குத்தகை தொகை பாக்கி வைத்திருப்பவர்களும் மற்றும் (சால்வென்) கொடுக்க தவறியவர்களுக்கு கண்டிப்பாக ஏலம் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்கள். ஏற்கனவே எடுத்த ஏலத்தொகை அல்லது குத்தகை தவணைத் தொகை சரிவரக் கட்ட தவறியிருந்தாலும் மற்றும் ஏலக்கட்டுப்பாட்டிற்கு மாறாக நடந்திருந்தாலும், அல்லது நேர்மை தவறியமைக்காக குற்றம் சாட்டப்பட்டு தண்டனை அடைந்திருந்தவராயிருந்தாலும், நகராட்சி நிர்வாகத்திற்கு எதிராக செயல்பட்டவராக இருந்தாலும் மற்ற எக்காரணத்தினாலும், ஒருவர், நகராட்சியில் ஏலம் எடுப்பது விரும்பத்தக்கதல்லவென ஏலம் நடத்துபவர் கருதினாலும் அப்பேர்ப்பட்ட ஒருவர் அவர் பெயரிலோ அவரது மனைவி மற்றும் சகோதர, சகோதரிகள், உறவினர்கள் பெயரிலோ ஏலம் எடுக்க அனுமதிக்கப்பட்மாட்டார்கள். அவர் கேட்கும் ஏலத்தை மறுத்து விட ஏலம் நடத்துபவருக்கு அதிகாரம் உண்டு. எந்தவொரு குத்தகைதாரர் நகராட்சி நிர்வாகத்திற்கு தீங்கு விளைவிப்பவராயினும் அவர் நகராட்சியை மீறி நடந்ததாக கருதி அப்படிப்பட்ட குத்தகைதாரர்கள் நகராட்சியில் நடைபெறும் எந்தவொரு உரிமை ஏலத்திலும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்.

**16,** ஏலம் நடத்துபவர் யுக்திபடி ஏலம் முன்பின் நடத்தப்படும். ஒவ்வொரு ஏலத்திற்கும் அரசு மதிப்பு இவ்வளவு என ஏலம் நடத்துபவரால் தீர்மானிக்கப்படும்.

**17.** அட்டவணை 1ல் கண்ட எல்லா இனங்களும் 2024 ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் அல்லது குத்தகை உரிமம் ஒப்படைக்கப்பட்ட நாள் முதல் 2027ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ம் நாள் முடிய மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிம காலமாகக் கொண்டு ஏலம் விடப்படும். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந நிப) துறை அரசாணை (நிலை) எண்.181 நாள்.19.09.2008-ன் படி ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாமாண்டில் 5% குத்தகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் தொகையில் 5% குத்தகை தொகையில் உயர்வும் செய்யப்படும்.

**18,** மறு ஏலம் கோர விரும்புவர்கள் ஏல நாள் நீங்கலாக விடுமுறை நாட்கள் உட்பட அலுவலக நாளில் அதாவது மாலை 5.00 மணி வரை சென்ற உயர்ந்த கேள்விக்கு மேல் அதிகப்படியாக கால்பங்கு கூடுதலாக செலுத்தி அதாவது ரூபாய்.100,000/-க்கு ஏலக் கேள்வி இருந்தால் கால்பாக கூடுதல் தொகை ரூ.25,000, சேர்ந்து ஆகக் கூடுதல் மொத்தம் ரூபாய் 1,25000/- நகராட்சி அலுவலகத்திற்கு ரொக்கமாக செலுத்தி அதன் பெயரில் நேரில் விண்ணப்பம் கொடுத்தால் தான் மறு ஏலன் விடுவது பற்றி பரிசீலிக்கப்படும் இரண்டாவது நாள் விடுமுறையாக இருந்தால் அதற்கு பிந்தைய வேலை நாளில் தொகையை ரொக்கமாக செலுத்தி விண்ணப்பம் கொடுக்கலாம்,

**19,** ஏலம் கேட்பவர் ஏலம் விடும் முழு உரிமைக்கு பெறுமானவர் அல்ல என்று எப்பொழுதாவது ஆணையருக்கு தெரிய வந்தால் அவரை மேற்கொண்டு அதிகப்படியான பொறுப்பு தொகை செலுத்த கோரவோ பொதுவான தொகைக்கு பிணையம் (ஜாமீன்) கோரவோ ஆணையருக்கும்

நகர்மன்றத்துக்கும் அதிகாரகள் உண்டு அதை மறுக்கவோ நீதிமன்றத்தில் வழக்குதொடுக்கவோ குத்தகைராருக்கு உரிமை இல்லை,

20, ஏலம் ஒப்புக்கொண்ட விபரம் கிடைத்த எழு தினங்களுக்குள் குத்தகைதாரர் சொந்த செலவில் போதுமாண முத்திரைத் தாளில் தன்ணையும் தன் சொத்துக்குரியவர்களையும் கட்டுப்படுத்தி நகராட்சி ஆணையர் அவர்களுக்கு ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். மேற்படி ஒப்பந்த பத்திரத்தை ஒப்பந்ததாரர் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும், இதில் சொல்லப்பட்ட அத்தனை நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டே அவர் குத்தகையை ஒப்புக்கொண்டுள்ளார் என கருதப்படும்.

21, அட்டவணை 1ல் கண்ட குத்தகை இனங்களில் குத்தகைதாரர்கள் குத்தகை முடிவு தெரிவித்த நாளிலிருந்தே ஏழு தினங்களுக்குள் அல்லது மார்ச் மாதம் 31ம் தேதிக்குள் இது எது முந்தியோ அந்த காலத்திற்குள் ஏலத் தொகை முழுதையும் ஒரே தவணையில் பணவரைவோலையாக செலுத்த வேண்டும் எக்காரணம் கொண்டும் வங்கி காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. குத்தகைத் தொகை முழுவதையும் ஒரே தவணையாக பண வரைவோலையாக/பேங்கர் செக்காக செலுத்திய பின்னரே குத்தகை இனம் ஒப்படைக்கப்படும். மேலும் ஏலம் எடுத்தவர் தமது சொந்தச் செலவில் உரிய மதிப்புள்ள பத்திரம் வாங்கி ஆணையர் குறிப்பிடும் ஷரத்துகளின்படி ஒப்பந்தம் எழுதித்தர வேண்டும்.

22, பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஓராண்டுக்கு மட்டுமே (2025-2026) கோரப்படவேண்டும். குத்தகைதாரர் முதல் ஆண்டு (2025-2026) குத்தகை தொகையிலிருந்து ஒவ்வொரு ஆண்டுக்கும் 5 சதவிகிதம் உயர்வு செய்து 2025-2026,2026-2027,2027-2028 ஆண்டுகளுக்கு குத்தகைத் தொகை முழுவதையும் ஒரே தவணையில் செலுத்தி குத்தகையை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

23, குத்தகைதார் செலுத்தும் கூடுதல் வைப்பு தொகை குத்தகை தொகைக்காக ஈடு செய்யப்பட மாட்டாது குத்தகைக்கால தணிக்கை முடிவடைந்த பின்னரே கூடுதல் வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படும்,

24, எனவே குத்தகைத் தொகை முழுதையும் ஓரே தவணையில் செலுத்த தவறினாலும் ஒப்பந்தப் பத்திரம் எழுதிக்கொடுக்கத் தவறினாலும் எற்கனவே செலுத்திய பொறுப்புத் தொகை அனைத்தையும் பறிமுதல் செய்வதுடன் குத்தகைதாரர் பொறுப்பில் உள்ள குத்தகையை ரத்து செய்து மறு ஏலம் விடவோ நகராட்சி பணியாளர்கள் மூலம் நடத்தவோ. ஆணையர் அல்லது நகர்மன்றம் முடிவு செய்யும் விதத்தில் செயல்படுத்தவோ அதிகாரம் உண்டு அவ்வாறு செயல்படுத்துவதால் ஏற்படும் சகலவிதமான இழப்புகளுக்கும் குத்தகைதாரரே முழுப் பொறுப்பாவார். ஏதாவது காரணங்களை முன்னிட்டு மேற்படி நிபந்தனைகளிலிருந்து விளக்களித்து குத்தகை நடத்த அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அப்படி நடத்தும் காலத்தில் குத்தகைதார் குத்தகை நிபந்தனைகளுக்கு மாறாக நடக்கிறார் என அறிய வந்தாலும் எந்த நேரத்திலும் எவ்வித அறிவிப்பு இல்லாமலும் குத்தகையை குத்தகைதாரர் பொறுப்பில் இருந்து ரத்து செய்து ஆணையாளர் மற்றும் நகர்மன்றம் முடிவின் படி செயல்படுவதை குத்தகைதார் ஆட்சேபிக்கவோ எதிர்த்து நீதிமன்றத்திற்கு செல்லவோ தகுதியற்றவர் ஆவார்.

25, குத்தகை தொகை முழுதையும் ஒரே தவணையாக அதாவது 00-00-2025-க்குள் பணவரைவோலை/பேங்கர் செக்காக மட்டுமே செலுத்த வேண்டும் தவறினால் குத்தகையை ரத்து செய்து மறுஏலம் விடப்படும். அவ்வாறு மறு ஏலம் நடத்துவதால் ஏற்படும் சகல

நஷ்டங்களுக்கும் ஏலம் எடுத்தவரே முழுப்பொறுப்பாவார் ஏலம் எடுத்த தொகையை கணக்கில் கொண்டு அதில் நாள் ஒன்றுக்கு எவ்வளவு தொகை கணக்கிட்டு மறு ஏலம் உறுதி செய்யும் நாள் வரை ஏலம் எடுத்தவரிடம் வசூல் செய்ய அல்லது செலுத்தப்பட்ட வைப்புத் தொகை ஈடு செய்யப்படும்.

26. குத்தகைதாரர் எக்காரணம் கொண்டும் ஏல உரிமத்தை உள்குத்தகைக்கு விடவோ அல்லது மாற்றவோ கூடாது. அப்படி இல்லாமல் உள் குத்தகைக்கு விட்டாலோ, வேறு நபருக்கு மாற்றி ஒப்படைக்கப்பட்டாலோ, குத்தகையை குத்தகைதாரரது பொறுப்பில் இருந்து ரத்து செய்து நகராட்சி ஆணையர் அல்லது நகர்மன்றம் விரும்பும் முறையில் எப்படி வேண்டுமானாலும் முடிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளலாம். அதனால் ஏற்படும் இழப்பிற்கு குத்தகைதாரரே முழு பொறுப்பேற்க வேண்டும். மேலும் மேற்கண்ட நடவடிக்கையை எதிர்த்து குத்தகைதாரர் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேட எவ்வித உரிமையும் இல்லை, நிபந்தனை 23 மற்றும் 24 முற்றிலும் இதற்கு பொருந்தும்.

27. மின் பழுதுகளினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ தண்ணீர் வழங்க இயலவில்லை என்றால் எவ்வித இழப்பும் நகராட்சியிலிருந்து பெறத்தக்கதல் மேற்படி காலங்களில் குத்தகைதாரரே தமது சொந்த செலவில் தேவையான தண்ணீர் தேவையை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

28. மேற்கண்ட நிபந்தனைகளின் படி குத்தகைத் தொகையை தவணைக்குள் செலுந்த தவறினாலோ ஆணையர் அவர்கள் குறிப்பிடும் காலத்திற்குள் தாமதக்கட்டணத்துடன் குத்தகைத் தொகையை செலுத்த தவறினாலும் மறு அறிவிப்பு வழங்காமல் குத்தகை தலத்தில் பிரவேசித்து துறை மூலம் குத்தகை கட்டணம் வசூல் செய்ய ஆணையருக்கு அதிகாரம் உண்டு. அவ்விதம் நகராட்சி அலுவலர்களால் வசூலிக்கப்பட்ட தொகை நகராட்சி நிதியில் செலுத்தப்படுமேயின்றி குத்தகைதாரர் செலுத்த வேண்டிய தொகைக்கு ஈடுசெய்யப்படமாட்டாது. மேற்படி காலத்தில் குத்தகை பாக்கி முழுவதையும் குத்தகைதாரர் செலுத்திவிட்டால் ஏல குத்தகையை குத்தகைதாரருக்கு மீண்டும் ஒப்படைக்கப்படும். தொடர்ந்து ஏழு தினங்களுக்கு மேல் குத்தகை தொகையையும் தாமத கட்டணைத்தையும் செலுத்தப்படாமல் இருந்தால் உரிமை ரத்து செய்து மறு ஏலம் விடப்படும். அல்லது துறை மூலம் வசூலிக்கப்படும். இதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் குத்தகைதாரரே பொறுப்பாவார்

29, எக்காரணத்தை முன்னிட்டும் மறு ஏலம் விடும்படி நேர்த்து அதில் லாபம் ஏற்பட்டால் அந்த லாபத்தில் பங்கு கோர குத்தகைதாரருக்கு உரிமை இல்லை,

30, எக்காரணத்தைக் கொண்டும் குத்தகை தொகையில் எப்பாகத்தையும் கழிவு செய்யக் கோரவும் தள்ளுபடி செய்யக் கோரவும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிகமாக வசூல் செய்ய கோரவும் குத்தகைதாரருக்கு உரிமை கிடையாது

31, ஏலம் நடைபெறும் போதாவது அல்லது குத்தகைகாலத்தில் எந்த நேரத்திலாவள குத்தகைதாரர் குத்தகை தொகையை செலுத்த தகுதியுள்ளவரா என்ற சந்தேகம் ஆனணயருக்கோ அல்லது நகர்மன்றத்திற்கோ ஏற்படுமாயின் ஆணையர் அல்லது நகர்மன்றம் குறிப்பிடும் ஈட்டு தொகையை குத்தகைதாரர் கூடுதல் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும். கூடுதலான அல்லது மேற்படி தொகைக்கு திருப்திகரமான ஜாமீன் பத்திரம் எழுதித்தர எற்பாடு செய்ய வேண்டும்.

32, ஒப்பந்தக் கட்டுப்பாடுகளை மீறிய குற்றத்திற்காக கட்டியுள்ள காப்புத் தொகை மற்றும் கூடுதல் காப்புத் தொகையை பறிமுதல் செய்யும் விசயத்தில் ஆணையர் அல்லது நகர்மன்றத்தின் தீர்மானமே முடிவானதாகும். இதை மறுக்கவோ நீதிமன்றத்தில் வழக்கு தொடரவோ குத்தகைதாரருக்கு உரிமை இல்லை.

33, குத்தகைக் காலத்தில் குத்தகை தலத்தில் மின்சார பல்புகள். அல்லது குழல் விளக்குகள் உள்ளிட்ட மின்சாதன பொருட்கள் பழுதாகிப் போனால் புதிதாக மாற்றுவது குத்தகைதாரரையே சார்ந்தது. விளக்கு அல்லது இதர பாய்ண்ட்டுகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பவரையும் சேர்த்து எழுத்து மூலம் ஆணையரிடம் முன் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். இடைப்பட்ட காலத்தில் எவ்வித மாறுதல்களும் ஆணையரின் அனுமதி இல்லாமல் செய்யக்கூடாது. குத்தகை கட்டிடங்களில் ஏற்படும் சிறிய பழுதுகளை குத்தகைதாரர் தனது சொந்த செலவில் செய்துகொள்ள வேண்டும். குத்தகைக் காலம் முடிந்து கட்டிட வகையறாக்களை திரும்ப ஒப்படைக்கும் பொழுது கட்டிட வகையறாக்களுக்கும் மின் சாதன பொருட்களுக்கும் எவ்வித சேதாரமும் இல்லாமல் எண்ணிக்கை குறையாமலும் நல்ல முறையில் ஒப்படைக்க வேண்டும்.

34. குத்தகைதாராவது அல்லது குத்தகை பெற்றவராவது குத்தகை கட்டுப்பாட்டை மீறி நடந்தால் ஆணையரால் உரிய அபராதம் ரூ.100/- முதல் ரூபாய்: 10000/- வரை விதிக்கப்படும் அல்லது பிற நிபந்தனைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும். இதில் ஆணையரின் முடிவே இறுதியானது.

35, வருமான வரி இலாகா விற்பனை வரி இலாகா மற்றும் அரசு அதிகாரிகள் கோரும் அறிப்புகள் குத்தகைதார்ரை கட்டுப்படுத்த தவறி இருப்பதாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அறிக்கை செய்தால் குத்தகையை ரத்து செய்யவும் வைப்புத்தொகையை பறிமுதல் செய்யவும் ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு

36, குத்தகைதார எந்த ஒரு இனத்தை குத்தகைக்கு எடுத்திருத்தாலும் குத்தகை தொகையில் 18 % சேவை வரியாக குத்தகை தொகையுடன் சேர்த்து ஒரே தவணையாக செலுத்த வேண்டும். அதன் பின்னரே குத்தகை உரிமத்திற்கான உத்தாவு வழங்கப்படும் ,

37, இந்த அறிக்கையிலும் ஒப்பந்தத்திலும் உள்ள வாக்கியங்களுக்கும் ஆணையாளர் கூறும் விளக்க உரையே முடிவானதாகும் என்பதை தெரிந்து கொண்டு அதன்படி ஒப்புக்கொள்ளவும் செயல்படவும் குத்தகைதார் கட்டுப்பட்டவர் ஆவார்.

38, ஆணையாளரின் உத்தரவிற்கும் நகராட்சி பணியாளர்களின் மேற்பார்வைக்கும் உட்பட்டு குத்தகைதாரர் செயல்பட வேண்டும் ஆணையரால் அவ்வப்போது இடப்படும் உத்தரவுகளுக்கும் குத்தகைதாரர் கட்டுப்பட்டவராவார்.

39, ஆணையாளரின் அனுமதி இல்லாமல் குத்தகைக்கு விடப்படும் இடம், பங்கி ஸ்டால். கட்டிடங்களின் அளவுகளை கூட்டவோ குறைக்கவோ அல்லது மாற்றி அமைக்கவோ குத்தகைதாரருக்கு உரிமை இல்லை.

40, குத்தகைதாரர் குத்தகை காலத்தில் நடத்திவரும் ஒவ்வொரு தொழிலுக்கும் தொழில் வரி மற்றும் அபாயகரமானதும் அருவருக்கத்தக்க தொழில் சம்மந்தமான உரிமங்களுக்கும் (D&O)

உணவுக் கலப்பட குத்தகைகளுக்கும் உரிய கட்டணங்களை நகராட்சி அலுவலகத்தில் செலுத்தி ஆணையாளரின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

**41,** குத்தகைதாரருக்கு அனுப்பப்படும் அறிக்கைகள் மற்றும் உத்தரவுகள் அவரின் இருப்பிடத்திற்கோ தொழில் செய்யும் இடத்திற்கோ அனுப்பப்பட்டால் அல்லது அவ்விடத்தில் போடப்பட்டால் அவரிடம் சரியான முறையில் சார்பு செய்ததாக கருதப்படும்.

**42**. குத்தகைதாரர் இறந்து போனலும் அல்லது எந்த காரணத்திலாவது உரிமை நடத்தாமல் போனாலும் அந்த குத்தகையின் சகல சட்ட திட்டங்களும் மேற்படி ஒப்பந்தத்தை மேற்படி குத்தகைதாரக்களுக்கும் மற்றும் பிற வகையில் உரிமை பெற்றவர்களும் கட்டுப்பட்டவராவர்கள்.

**43**, குடிதண்ணீர் விதியோகம் மின்சார சம்மந்தமாக அதற்காக ஆகும் செலவுகள் அனைத்தும் குத்தகைதாரரே செலுக்கு வேண்டும்.

**44**, நகராட்சி சொத்துவரி, வாகன வரி, தொழில் வரி தண்ணீர் கட்டணம் மற்றும் குத்தகை பாக்கிகளை நிறுவையின்றி நகராட்சியில் செலுந்த வேண்டும். தவறினால் குத்தகையில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய வரி இனங்கள் நிலுவையில் இருந்தாலும் குத்தகையில் கலந்து கொள்ள தகுதியுற்றவராவார்,

**45**, ஒவ்வொரு நகராட்சி கட்டிட கடைகளிலும் பங்க் ஸ்டாலிலும் தீயை அணைக்கும் உபகரணங்கள் குத்தகைதாரர் தமது சொந்த செலவில் நிறுவ வேண்டும்.

**46**, எந்தவொரு விபத்தினாலும் கட்டிடம் பாதிப்பு ஏற்பட்டு நஷ்டம் எற்பட்டால் அந்த நஷ்ட தொகையை குத்தகைதாரால் நகராட்சிக்கு ஈடு செய்யப்படவேண்டும்.

**47**, குக்தகைதாருக்கும் குத்தகை தளத்திற்கு வரும் வியாபாரிகளுக்கும் ஏதேனும் தாவா ஏற்பட்டால் அது குறித்து ஆணையரிடம் குத்தகைதாரரோ, வியாபாரிளோ புகார் செய்தால் ஆணையயின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**48**, கட்டிட கடைகளுக்கு தன் சொந்த செலவில் மின் இணைப்புச் செய்ய குத்தகைதாரர் விரும்பினால் அதற்கான செலவுத் தொகை மற்றும் டெபாஸிட் தொகைகளை ஏற்றுக்கொள்வதுடன் ரூ.5000–ஐ நகராட்சியில் டெபாஸிட்டாக செலுத்தியபின் குத்தகை காலம் முடியும் வரை ஆணையர் பெயரில் மின் இணைப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான செலவுத் தொகை திரும்ப வழுங்கப்பட மாட்டாது மீட்டர் பொருத்தப்பட்டால் மின் விளக்கு உள்ளிட்ட மின் கட்டணங்களுக்கு கேட்டி வந்தவுடன் தமது சொந்த செலவில் மின் கட்டணத்தை செலுத்த வேண்டும். செலுத்த தவறினால் அதனால் ஏற்படும் நஷ்டங்களுக்கு குத்தகைதாரரே பொறுப்பாவார். மீட்டர் பொருத்தப்படாமலிருந்தால் இருக்கும் கடைகளுக்கு உரிய அளவிலான மின் கட்டணத்தை அந்தந்த மாதம் 5ம் தேதிக்குள் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வந்து விபரத்தை பெற்று உரிய கட்டணத்தை நகராட்சியில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். மாதாந்திர மின்பட்டண வகைக்கான குத்தகையின் ஆரம்ப காலத்தில் நிலுவை இல்லை என்றால் குத்தகை காலம் முடிந்த பின்னர் திருப்பி கொடுக்கப்படும். ஆனால் நகராட்சி மூலம் கட்டாயமாக மின் இணைப்பு தர வேண்டும் என கோர குத்தகைதாருக்கு உரிமை கிடையாது.

**49**, மூடி முத்திரையிட்டு வரப்படும் டெண்டர்களுக்கும் இதில் குறிப்பிட்டுள்ள திபத்தனைகளும் செல்லத் தக்கதாகும்

**50**, ஏலம் விடப்பட்ட பங்க கடைகளுக்கு குத்தகை காலத்தில் ஏற்படும் எல்லா பழுதுகளையும் குத்தகைதாரர் தமது சொந்த செலவில் பார்த்துக்கொள்ள வேண்டும், கட்டிடத்தின் முன்போ பின்போ தற்காலிகமாக நிரந்தரமாகவோ கூரை போடக் கூடாது. குத்தகைதாரர் ஆணையர் அனுமதி பெற்று உரிய ஆக்கிரமிப்பு கட்டணம் செலுத்தி ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவார். இவ்வாறு சொந்த செலவின் அமைத்துக்கொள்ளும் ஆக்கிரமிப்புகளுக்கோ வசதிகளுக்கோ குத்தகை காலம் முடிந்தவுடன் காலி செய்யும் பொழுது நகராட்சியால் எவ்வித நஷ்ட ஈடும் தரப்பட மாட்டாது. மேலும் ஆக்கிரமிப்பு செய்வதை அனுமதிப்பதோ மறுப்பதோ ஆணையரின் விருப்பத்தை பொருத்ததாகும்.

**51**, கடை வைத்துள்ள இடங்களுக்கு அருகில் அல்லது எந்த இடத்திலும் புதிய பங்க ஸ்டால் அமைக்க நகராட்சிக்கு அதிகாரம் உண்டு.

**52**. கடைகளின் மீது எவ்வித சொத்து உரிமையும் குத்தகைதாரருக்கு கிடையாது குத்தகைதாரருக்கு ஒப்படைக்கப்பட்ட நேரிட்டால் அதற்கு குத்தகைதாரர் கட்டுப்பட்டவராவார்.
**53**. நகராட்சியால் குத்தகைக்கு விடப்பட்ட அல்லது ஏல குத்தகை புதுப்பித்துக் கொடுக்கப்பட்ட இடம் அல்லது இனம் நகராட்சிக்குத் தேவைப்படும் பட்சத்தில் அல்லது வேறு காரணம் கருதியோ மேற்படி குத்தகையை ரத்து செய்யவோ, வேறு இடத்திற்கு மாற்றி அமைத்து தொடர்ச்சியாக உரிமையை அனுபவித்துக் கொள்ள அனுமதிக்கவோ அல்லது மறு ஏலம் விடவோ முடிவு செய்ய ஆணையருக்கு அதிகாரம் உண்டு,
**54**, குத்தகை காலம் முடிந்தவுடன் குத்தகைதாரர்கள் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட குத்தகை இனங்களை நல்ல நிலையில் எழுத்துப்பூர்வமாக நகராட்சியில் ஒப்படைக்க வேண்டும் ஏதாவது பழுது ஏற்பட்டால் அதனால் ஏற்படும் நஷ்டத்தை நகராட்சி நிர்ணயம் செய்து குத்தகைதாரரிடம் வசூலிக்கப்படும்.
**55**. நகராட்சி கட்டிட கடைகளின் யூரியா காம்பளக்ஸ் போன்ற உர வியாபாரம் செய்தால் குத்தகை நீங்கலாக குத்தகை காலத்திற்கு அதிகப்படியாக ரூ.1000/– செலுத்தவேண்டும். அந்த தொகை திரும்பத்தரப்படமாட்டாது.
**56**, குத்தகைதாரர் நகரமன்ற உறுப்பினராகவோ அல்லது அவரது நெருங்கிய இரத்த சம்மந்த உறவினர்களாக (கணவன/மனைவி /மகன் /மகள்/ தாய்/ தந்தை/ சகோதன்/சகோதரி) இருக்ககூடாது,
**57**. குத்தகைதாரரின் வீட்டு முகவரி மற்றும் அடையாளம் அறிய குடும்ப அட்டை வாக்காளர் அடையாள அட்டை அல்லது ஆதார் அட்டைநகல் மற்றும் புகைப்படநகல் அளிக்கவேண்டும் குத்தகைதாரரின் மூன்று புகைப்படநகல் அளீக்கவேண்டும்
. 58, அடையாள அட்டை மத்திய அரசால் நிர்ணயீக்கப்படும் VAT மற்றும் GST செலுத்த வேண்டும் என தெரியவந்தால் அதனையும் குத்தகைதாரரிடம் வசூல் செய்ய அதிகாரம் உண்டு,
**59**, குத்தகைதாரர் ஆண்டு உரிமையுடன் ஆண்டுக்குரிய தொழில் வரியையும் செலுத்த வேண்டும்.
**60**, பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி இரண்டிலும் கலந்து கொள்வோர் தனித் தனியாக காப்புத் தொகை செலுத்த வேண்டும்,
61,மாண்பமை, சென்னை உயர்நீதி மன்ற உத்திரவுபடி ஏற்கனவே தினசரி நாளங்காடி நடத்தி வந்த பழைய குத்தகைதாரக்களுக்கு கடை வழங்க தற்போது நடைபெறவுள்ள பொது ஏலத்தில் கோரும் அதிகபட்ச தொகைக்கு சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் பழைய குத்தகை தரார்களுக்கு கடை ஓதுக்கீடு செய்யப்படும்,

**62**. 5 சதவீகித கடைகள் அதிகபட்ச ஏலத்தொகைக்கு இணையாக செலுத்த தயராக உள்ள மாற்றுதிறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**அலுவலக குறிப்பு:–**

1) குழுநிர்ணயம் தொகையினை மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகோரிட மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
3) நகராட்சியின் நிதிவளர்ச்சியினை கருத்தில்கொண்டு அவசியம் கருதி மேற்கண்ட குத்தகை இனங்களை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரவும் மற்றும் விளம்பரம் செய்யவும் அதற்குண்டான செலவினத்தை வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண் 230 /2025/அ1)

**தீர்மானம் எண்.744** **நாள். 19.09.2025**

புதிய தினசரி நாளாங்காடி கடைகளுக்கான நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகையினை இந்நகர மன்றத்தால் கீழ்கண்டுள்ளவாறு 3 மண்டலங்களாக பிரித்து அக்கடைகளுக்கான வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகையினை கீழ்காணும் விவரப்படி நிர்ணயம் செய்தும் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், ஒரு மனதாக இந்நகரமன்றம் ஒப்புதல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1) சாலையின் முன் பக்கமாக முதல் வரிசையில் உள்ள கடைகளை மண்டலம் A என பிரித்து 61 கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதற்கான வைப்புத் தொகை ரூ.2.00 இலட்சம் மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.2.00 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டது.
2) உள் பக்க கடைகளை மண்டலம் B என பிரித்து 124 கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதற்கான வைப்புத் தொகை ரூ.1.50 இலட்சம் மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.1.50 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டது.
3) மீன் இறைச்சி கடைகளை மண்டலம் C என பிரித்து 19 கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.அதற்கான வைப்புத் தொகை ரூ.0.75 இலட்சம் மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.0.75 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டது.

| வ. எண் | மண்டலம் | மொத்த கடைகள் | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கடை எண்கள் | வைப்பு தொகை செலுத்தப்பட வேண்டிய தொகை (கடை ஒன்றுக்கு.ரூ) | கூடுதல் ஏல வைப்பு தொகை (கடை ஒன்றுக்கு.ரூ) |
|---|---|---|---|---|---|
| 1 | A | 61 | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 30, 31, 40, 41, 50, 51, 60, 61, 70, 71, 80, 81, 90, 91, 100, 101, 110, 111, 120, 121, 130, 131, 140, 141, 149, 150, 158, 159, 167, 168, 176, 177, 178, 179, 180, 181, 182, 183, 184, 185, | ரூ.2.00 இலட்சம் | ரூ.2.00 இலட்சம் |
| 2 | B | 124 | 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 62, 63, 64, 65, | ரூ.1.50 இலட்சம் | ரூ.1.50 இலட்சம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 66, 67, 68, 69, 72, 73, 74, 75, 76, 77, 78, 79, 82, 83, 84, 85, 86, 87, 88, 89, 92, 93, 94, 95, 96, 97, 98, 99, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 112, 113, 114, 115, 116, 117, 118, 119, 122, 123, 124, 125, 126, 127, 128, 129, 132, 133, 134, 135, 136, 137, 138, 139, 142, 143, 144, 145, 146, 147, 148, 151, 152, 153, 154, 155, 156, 157, 160, 161, 162, 163, 164, 165, 166, 169, 170, 171, 172, 173, 174, 175, | | |
| 3 | C (மீன் இறச்சி கடைகள்) | 19 | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, | ரூ.0.75 இலட்சம் | ரூ.0.75 இலட்சம் |
| | **மொத்தம்** | | **204 கடைகளுக்கு மொத்தமாக வசூலிக்கப்படும் தொகை ரூ.** | **ரூ.322.25 இலட்சம்** | **ரூ.322.25 இலட்சம்** |

**<u>பொருள் எண். 2</u>**

அரக்கோணம் நகராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற நிகழ்ச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 17 முகாம்கள் நடைபெற உள்ளது மேற்கண்ட இடங்களில் நடைபெறும் முகாம்களுக்கு தேவையான குடிநீர் வசதி உணவு வசதி இணையதள வசதி மற்றும் முகாம்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் உள்ளூர் விலை புள்ளி பெற்று மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தோராயமான மதிப்பீட்டு தொகை ரூ.17.00 இலட்சத்திற்கு நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும், பணிக்கான தொகையினை 2025-26 ஆம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண். 585/2025/இ2**

**தீர்மானம் எண்.745** **நாள். 19.09.2025**

**நகர மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்)/-திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

**// உண்மை நகல் //**

ஆணையர்
அரக்கோணம் நகராட்சி.